ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020.11.30 |

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் 2020 நவெம்பரில் 4.1 சதவீதத்திற்கு அதிகரித்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 4.1%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 4.6%
மாதாந்த மாற்றம் : 0.4%

**மையப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்: 3.0%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 3.2%
மாதாந்த மாற்றம் : 0.3%







கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2020 ஒத்தோபரின் 4.0 சதவீதத்திலிருந்து 2020 நவெம்பரில் 4.1 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் மாதாந்த விலைகளின் அதிகரிப்பு மூலம் இது பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, உணவுப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2020 ஒத்தோபரின் 10.0 சதவீதத்திலிருந்து 2020 நவெம்பரில் 10.3 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது. உணவல்லா பணவீக்கமும் (ஆண்டிற்கு ஆண்டு) 2020 ஒத்தோபரின் 1.3 சதவீதத்திலிருந்து 2020 நவெம்பரில் 1.6 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது.

ஆண்டுச் சராசரி அடிப்படையில் அளவிடப்படுகின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றமானது 2020 நவெம்பரில் 4.6 சதவீதமான மாற்றமின்றிக் காணப்பட்டது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றமானது 2020 நவெம்பரில் 0.4 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. உணவு மற்றும் உணவல்லா வகைகளிலுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் இதற்குக் காரணமாக அமைந்தன. அதற்கமைய, உணவு வகையினுள் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு என்பவற்றின் விலைகள் 2020 நவெம்பரில் அதிகரித்தன. எனினும், மாதகாலப்பகுதியில் உடன் மீன் மற்றும் பழங்கள் என்பவற்றின் விலைகள் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. அதேவேளை, பிரதானமாக போக்குவரத்து (பஸ் கட்டணம்) துணை வகையில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்பின் காரணமாக மாத காலப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினை பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2020 நவெம்பரில் 3.0 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமானது 2020 ஒத்தோபரின் 3.4 சதவீதத்திலிருந்து 2020 நவெம்பரில் 3.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013 = 100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

தரவு இணைப்பு:

அட்டவணை 1: கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்

தளம்: (2013 = 100)

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2018 | சனவரி | 122.8 | 125.6 | -0.1 | 0.6 | 5.8 | 3.5 | 6.6 | 5.6 |
| | பெப்புருவரி | 121.9 | 125.8 | -0.7 | 0.2 | 4.5 | 3.5 | 6.4 | 5.3 |
| | மாச்சு | 121.4 | 125.9 | -0.4 | 0.1 | 4.2 | 3.4 | 6.1 | 5.0 |
| | ஏப்பிறல் | 121.5 | 126.2 | 0.1 | 0.2 | 3.8 | 3.5 | 5.9 | 4.7 |
| | மே | 122.9 | 126.4 | 1.2 | 0.2 | 4.0 | 3.2 | 5.7 | 4.5 |
| | யூன் | 125.4 | 127.0 | 2.0 | 0.5 | 4.4 | 3.4 | 5.6 | 4.4 |
| | யூலை | 125.8 | 127.3 | 0.3 | 0.2 | 5.4 | 3.9 | 5.6 | 4.3 |
| | ஓகத்து | 125.8 | 127.5 | 0.0 | 0.2 | 5.9 | 3.7 | 5.6 | 4.1 |
| | செத்தெம்பர் | 124.9 | 128.0 | -0.7 | 0.4 | 4.3 | 3.8 | 5.4 | 3.9 |
| | ஒத்தோபர் | 124.6 | 128.1 | -0.2 | 0.1 | 3.1 | 3.8 | 5.0 | 3.8 |
| | நவெம்பர் | 126.2 | 128.9 | 1.3 | 0.6 | 3.3 | 3.4 | 4.6 | 3.6 |
| | திசெம்பர் | 126.3 | 128.8 | 0.1 | -0.1 | 2.8 | 3.1 | 4.3 | 3.5 |
| 2019 | சனவரி | 127.4 | 132.5 | 0.9 | 2.9 | 3.7 | 5.5 | 4.1 | 3.7 |
| | பெப்புருவரி | 126.8 | 132.6 | -0.5 | 0.1 | 4.0 | 5.4 | 4.1 | 3.8 |
| | மாச்சு | 126.6 | 133.0 | -0.2 | 0.3 | 4.3 | 5.6 | 4.1 | 4.0 |
| | ஏப்பிறல் | 127.0 | 133.1 | 0.3 | 0.1 | 4.5 | 5.5 | 4.1 | 4.2 |
| | மே | 129.0 | 134.2 | 1.6 | 0.8 | 5.0 | 6.2 | 4.2 | 4.4 |
| | யூன் | 130.2 | 134.4 | 0.9 | 0.1 | 3.8 | 5.8 | 4.2 | 4.7 |
| | யூலை | 130.0 | 134.6 | -0.2 | 0.1 | 3.3 | 5.7 | 4.0 | 4.8 |
| | ஓகத்து | 130.1 | 134.6 | 0.1 | 0.0 | 3.4 | 5.6 | 3.8 | 5.0 |
| | செத்தெம்பர் | 131.1 | 135.2 | 0.8 | 0.4 | 5.0 | 5.6 | 3.9 | 5.1 |
| | ஒத்தோபர் | 131.3 | 135.2 | 0.2 | 0.0 | 5.4 | 5.5 | 4.0 | 5.3 |
| | நவெம்பர் | 131.7 | 135.5 | 0.3 | 0.2 | 4.4 | 5.1 | 4.1 | 5.4 |
| | திசெம்பர் | 132.4 | 135.0 | 0.5 | -0.4 | 4.8 | 4.8 | 4.3 | 5.5 |
| 2020 | சனவரி | 134.6 | 136.5 | 1.7 | 1.1 | 5.7 | 3.0 | 4.5 | 5.3 |
| | பெப்புருவரி | 134.6 | 136.9 | 0.0 | 0.3 | 6.2 | 3.2 | 4.6 | 5.1 |
| | மாச்சு | 133.4 | 136.9 | -0.9 | 0.0 | 5.4 | 2.9 | 4.7 | 4.9 |
| | ஏப்பிறல் | 133.6 | 137.2 | 0.1 | 0.2 | 5.2 | 3.1 | 4.8 | 4.7 |
| | மே | 134.2 | 138.1 | 0.4 | 0.7 | 4.0 | 2.9 | 4.7 | 4.4 |
| | யூன் | 135.3 | 138.6 | 0.8 | 0.4 | 3.9 | 3.1 | 4.7 | 4.2 |
| | யூலை | 135.4 | 138.9 | 0.1 | 0.2 | 4.2 | 3.2 | 4.8 | 4.0 |
| | ஓகத்து | 135.4 | 138.9 | 0.0 | 0.0 | 4.1 | 3.2 | 4.8 | 3.8 |
| | செத்தெம்பர் | 136.3 | 139.1 | 0.7 | 0.1 | 4.0 | 2.9 | 4.7 | 3.6 |
| | ஒத்தோபர் | 136.5 | 139.2 | 0.1 | 0.1 | 4.0 | 3.0 | 4.6 | 3.4 |
| | நவெம்பர் | 137.1 | 139.6 | 0.4 | 0.3 | 4.1 | 3.0 | 4.6 | 3.2 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்